வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – நாராயணசாமி

தேதி 18.12.2024 நேரம் மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

- பொருளாதார மேம்பாட்டுடன், நாட்டின் ஒற்றுமை மற்றும் கலாச்சார மேம்பாட்டிற்கும், அரசு சிறப்பு முக்கியத்துவம் அளித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு கிஷண் ரெட்டி கூறியுள்ளார்.
- கடந்த 10 ஆண்டுகளில், சிறுபான்மையினர் உட்பட ஏழைகளின் வாழ்க்கையை அரசு மேம்படுத்தி இருப்பதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.
- 2 நாள் அரசு முறைப் பயணமாக மாகே சென்றுள்ள புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று காலை மாகே கடற்கரை தூய்மை பணிகளை தொடங்கி வைத்தார்.
- காரைக்கால் மாவட்ட நிர்வாகம், நாளை முதல், வரும் 25 ஆம் தேதி வரை, நல்லாட்சி வாரம் கொண்டாட உள்ளது.

***கலாச்சாரம்*** (16)

வேளாண்மை, உள்கட்டமைப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டுடன், நாட்டின் ஒற்றுமை மற்றும் கலாச்சார மேம்பாட்டிற்கும், அரசு சிறப்பு முக்கியத்துவம் அளித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு கிஷண் ரெட்டி கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டின் ஒற்றுமை மற்றும் கலாச்சார வரலாற்றில் மொழிகளே முக்கிய அடித்தளமாக திகழ்வதாகவும், இந்தியாவில் பேசப்படும் 121 மொழிகள் மற்றும் ஆயிரத்து 600 கிளை மொழிகளுக்கு, தகவல் பரிமாற்றத்தில் மட்டுமன்றி, நாட்டின் கலாச்சார பாரம்பரியத்திலும் முக்கிய இடம் உண்டு என்றும் கூறினார்.

பாலி, பிராகிருதம், மராத்தி, அசாமி, பெங்காலி ஆகிய மொழிகளுக்கு மத்திய அமைச்சரவை அண்மையில் செம்மொழி அந்தஸ்து வழங்கி இருப்பதை அமைச்சர் சுட்டிக் காட்டினார். 11 மொழிகளுக்கு செம்மொழி அந்தஸ்து வழங்கி உள்ள ஒரே நாடு இந்தியா தான் என்றும் அவர் குறிப்பிட்டார். தேசிய கல்வி கொள்கையின் மும்மொழி அணுகுமுறை குறித்து அமைச்சர் பேசுகையில், கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் சாதாரண மக்களால் பிராந்திய மொழிகள் பயன்படுத்தப்படுவதை மும்மொழி கொள்கை ஊக்குவிக்கும் என்றார்.

<u>*சிறுபான்மை*</u> <u>1(11)</u>

கடந்த 10 ஆண்டுகளில், பிரதமரின் வீட்டு வசதி திட்டம், உஜ்வாலா திட்டம் போன்ற அரசின் திட்டங்களால், ஏழைகள் குறிப்பாக சிறுபான்மையினரின் வாழ்க்கை மேம்பட்டு உள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்கான தேசிய ஆணையத்தின் 20 ஆம் ஆண்டு நிறுவன நாள் விழாவில் உரையாற்றிய அவர், கல்வி மூலம், சிறுபான்மையினரின் அதிகார பங்கேற்பை மேம்படுத்துவதே, இந்த ஆணையத்தின் நோக்கம் என்றார்.

சிறுபான்மை பிரிவினரால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்கள் உட்பட அனைத்து கல்வி நிறுவனங்களும் தேசிய கல்விக் கொள்கையை முறையாக அமல்படுத்த வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

<u>*மாகே-கைலாஷ்நாதன்*</u> <u>(12)</u>

2 நாள் அரசு முறை பயணமாக மாகே சென்றுள்ள புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று காலை மாகே கடற்கரை தூய்மை பணிகளை தொடங்கி வைத்தார். தொடர்ந்து கண்ணூர் நூற்பாலையை அவர் பார்வையிட்டார். மாகே வில் பல்வேறு இடங்களில் நடைபெற்று வரும் சாலை மேம்பாட்டு பணிகளையும் அவர் பார்வையிட்டு

ஆய்வு செய்தார். முன்னதாக, நேற்று, பந்தக்கல் ஆரம்ப சுகாதார நிலையத்தை துணை நிலை ஆளுநர் பார்வையிட்டார். மாகே மண்டல நிர்வாக அதிகாரி அலுவலகத்தில் வளர்ச்சி பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தை அவர் தலைமை ஏற்று நடத்தினார். தொடர்ந்து மக்கள் குறை தீர்ப்பு கூட்டமும் நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர் திரு ரமேஷ் பரம்பத், மண்டல நிர்வாக அதிகாரி திரு மோகன்குமார், மாகே நகராட்சி ஆணையர் திரு சத்யேந்திர சிங் ஆகியோர் உடனிருந்தனர்.

*__பதிவுத் துறை-ரங்கசாமி__* __(19)__

புதுச்சேரியில், பத்திரப்பதிவுத் துறையின் இ-பத்திரம் மென்பொருளையும், நில அளவைத் துறையின் நிலமகள் மென்பொருளையும் ஒருங்கிணைத்து உருவாக்கப் பட்டுள்ள தானியங்கி பட்டா மாற்ற முறையை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடங்கி வைத்தார். பத்திரப்பதிவின் போதே, குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு பட்டா மாற்றத்திற்கு பரிந்துரை பெற இதனால் ஏதுவாகும் என்றும், பட்டா மாற்றத்திற்கு தனியாக விண்ணப்பிக்கத் தேவையில்லை என்றும் அரசு செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது அல்லாது, பத்திரப் பதிவுத் துறையில், பத்திரப் பதிவிற்கான கட்டணத்தை இணையவழியில் செலுத்தும் வசதியையும், முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார். சட்டப்பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், வருவாய்த் துறை செயலர் திரு ஆஷிஷ் மாதவ்ராவ் மோரே, மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன், மாவட்ட பதிவாளர் திரு செந்தில்குமார், பாரத ஸ்டேட் வங்கி புதுச்சேரி முதன்மை கிளையின் உதவி பொது மேலாளர் திருமதி அன்புமலர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதனால், அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களும், பணபரிவர்த்தனை அற்ற அலுவலகங்களாக மாற்றப் படும் என பதிவுத் துறை, செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது.

*காரைக்கால்- இண்ட்ரோ* (4)

காரைக்கால் மாவட்ட நிர்வாகம் நாளை முதல், வரும் 25 ஆம் தேதி வரை நல்லாட்சி வாரம் கொண்டாட உள்ளது. இந்த ஒரு வார காலத்தில் மக்கள் குறை தீர்ப்பு முகாம்கள், மருத்துவ முகாம்கள், மற்றும் நலத்திட்ட நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இதுகுறித்து, மேலும் சில தகவல்கள்.....

*காரைக்கால்-வாய்ஸ் -1* (17)

காரைக்காலில், நல்லாட்சி வாரத்தின் தொடக்க தினமான நாளை சித்தா தின சிறப்பு மருத்துவ முகாமும், சிறப்பு குறை தீர்ப்பு முகாமும் நடைபெற உள்ளன.

நாளை மறுநாள் 20 ஆம் தேதி, காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில், புதுச்சேரியை சேர்ந்த மருத்துவ நிபுணர்கள் மூலம் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற உள்ளது.

வரும் சனிக்கிழமை மக்களை தேடி மாவட்ட ஆட்சியர் நிகழ்ச்சிக்கும், சிஎஸ்ஆர் நிதி மூலமான பல்வேறு வளர்ச்சி திட்டங்களின் தொடக்க விழாவிற்கும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. அன்றைய தினம், டி.ஆர் பட்டினத்தில் பொதுப்பணித் துறையினர் மரம் நடும் விழா ஒன்றையும் நடத்த உள்ளனர்.

வரும் ஞாயிற்றுக் கிழமை காரைக்காலில், அனைத்து அரசு அலுவலகங்களிலும், சிரமதான இயக்கத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினம் கணித நாள் விழாவின் ஒரு பகுதியாக, வீட்டுக்கு ஒரு விஞ்ஞானி இயக்கம் நடைபெற உள்ளது.

வரும் 23, ஆம் தேதி காரைக்கால் வேளாண் அறிவியல் மையத்தில் விவசாயிகள் தின விழா நடைபெறும் என்றும், அன்றைய தினம் நல்லாட்சி நடைமுறைகள் பற்றிய பயிலரங்கத்திற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாகவும் மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

*காரைக்கால் - வாய்ஸ்- 2* (10)

வரும் 24 ஆம் தேதி காரைக்காலில், விவசாயிகளுக்கான சிறப்பு குறை தீர்ப்பு முகாம் நடைபெற உள்ளது. அன்றைய தினம் காரைக்கால் வர்த்தக சபையில், பிரதமரின் சூரியகர் திட்டம் பற்றிய நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நல்லாட்சி வாரத்தின் இறுதிநாளான வரும் 25 ஆம் தேதி காரைக்கால் கடற்கரை மற்றும் நகரப் பகுதிகளில், தூய்மை பணிகளும், திடக்கழிவு மேலாண்மை பற்றிய விழிப்புணர்வு இயக்கமும் நடைபெறும்.

நல்லாட்சி வாரத்தின் மற்றொரு பகுதியாக காரைக்கால் அறிஞர் அண்ணா அரசு கலை- அறிவியல் கல்லூரியில், வரும் 23 ஆம் தேதி வேலை வாய்ப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெறும் என்றும், அறிவிக்கப் பட்டுள்ளது.

*வானிலை* (14)

இன்று தென்மேற்கு வங்கக் கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, அடுத்த 24 மணி நேரத்தில் வடமேற்கு திசையில் நகர்ந்து, வட தமிழக மற்றும் தெற்கு ஆந்திர கடலோர பகுதிகளுக்கு அருகில் நிலவக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக இன்றைய தினம், சென்னை, செங்கல்பட்டு, மற்றும் திருவள்ளுர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை எதிர் பார்க்கப் படுகிறது. வட கடலோர தமிழகம் மற்றும் புதுச்சேரி காரைக்கால்- பகுதிகளில் இன்றும், நாளையும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழக கடலோர பகுதிகள் மற்றும் வங்கக் கடல் பகுதிகளில் மணிக்கு 45 கிலோ மீட்டர் வரையிலான வேகத்தில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே புதுச்சேரியில் கடல் சீற்றம் அதிகமாக இருப்பதால் மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை. இதுகுறித்து எமது செய்தியாளர் கந்தன்......

காஷ்மீர் மாணவர் (7)

பாரத் தர்ஷண் பயணமாக, லடாக் யூனியன் பிரதேசத்தில் இருந்து, புதுச்சேரி வந்துள்ள 26 மாணவர்கள், 2 ஆசிரியர்கள் மற்றும் 2 இந்தோ-திபேத்திய எல்லைக்காவல் படையினர், இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமியை, மரியாதை நிமித்தம் சந்தித்தனர். இவர்களுக்கு, இனிப்பு மற்றும் எழுது பொருட்கள் அடங்கிய தொகுப்புகளை முதலமைச்சர் வழங்கினார். புதுச்சேரியில் 2 நாள் தங்கியிருக்கும் இக்குழுவினர், முக்கிய சுற்றுலா தலங்களை பார்வையிட உள்ளனர்.

அஸ்வின் (9)

இந்தியாவின் நட்சத்திர கிரிக்கெட் வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின், சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். பார்டர்-கவாஸ்கர் கோப்பைக்கான 3 ஆவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி டிராவில் முடிவடைந்த நிலையில், இன்று அவர் இதை அறிவித்தார். 38 வயதான அஸ்வின், சர்வதேச போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய 2 ஆவது இந்திய வீரர் என்ற பெருமைக்கு உரியவர் என்பதும் ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான நடப்பு தொடரில் இது வரை முடிவடைந்த 3 போட்டிகளில் அஸ்வின் ஒரு போட்டியில் மட்டுமே இடம் பெற்றதும் குறிப்பிடத் தக்கது.

ரயில்வே (11)

மகா கும்பமேளா திருவிழாவின் போது ரயிலில் இலவசமாக பயணிக்க, பயணிகள் அனுமதிக்கப் படுவார்கள் என ஊடகங்களில் வெளியான செய்திகளை அரசு நிராகரித்துள்ளது. இது முற்றிலும் அடிப்படையற்ற, தவறான தகவல் என்று ரயில்வே அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. டிக்கெட் வாங்காமல் ரயிலில் பயணம் செய்வது தண்டனைக்குரிய குற்றம் என்றும், கும்பமேளா அல்லது எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இலவச பயணத்தை அனுமதிக்க

வகையில்லை என்றும், அமைச்சகம் கூறியுள்ளது. அதே சமயம், மகா கும்பமேளா திருவிழாவின் போது, பயணிகள் தடையின்றி, சுமுகமாக பயணிக்க தேவையான எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொடுக்க ரயில்வேத் துறை உறுதி பூண்டுள்ளதாக, அறிக்கையில் மேலும், தெரிவிக்கப் பட்டுள்ளது.

*ரெட்டியார்* (6)

புதுச்சேரியின் முன்னாள் முதலமைச்சர் அமரர் வெங்கடசுப்பா ரெட்டியார் பிறந்த நாள் அரசு சார்பில் இன்று கொண்டாடப் பட்டது. பொதுப்பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், சட்டமன்ற உறுப்பினர் திரு லட்சுமிகாந்தன் ஆகியோர் வெங்கடசுப்பா ரெட்டியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.